Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 85 Of 2023**

Deposition of ....... witness for .................. Prosecution........ **P.W.12**

Defence Court

| | |
|---|---|
| Name | திரு.வெங்கடேசன் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 24th day of February 2026.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 24th day of February 2026.**

**1முதல் 3 எதிரிகள் ஆஜர்.**

**(சாட்சியை அரசு தரப்பு வழக்கறிஞர் அடையாளம் காட்டினார்)**

**முதல்விசாரணை**:

நான் தமிழக காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி கடந்த 2025 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2022 ஆம் ஆண்டு நான் முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது 20.08.2022 ஆம் தேதி முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய குற்ற எண் 364/2022 பிரிவு 294(பி), 323, 324, 506(2) படி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பரமசிவம் வழக்கு பதிவு செய்தததை என் பார்வைக்கு வைத்ததை 13.00 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் குமார், ஏழுமலை இவர்கள் முன் மாதிரிவரைப்படம் தயார் செய்தேன். **அந்த மாதிரி வரைப்படம் அதசாஆ 8 ஆகும்.** பார்வை மகஜர் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அதசாஆ 3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளதுசெய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தும் கையொப்பம் பெற்றும் சம்பவம் உண்மை என தெரிந்தும் சாட்சிகள் சிவா, சூர்யா, ராஜ்குமார், ராஜலட்சுமி, ஞானசெல்வம் இவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை தேடி எதிரி 16.30 மணிக்கு மருங்கூர் டாஸ்மார்க் கடை எதிரே நின்று இருந்தவரை எதிரி உக்கிரவேல் என்பவரை அடையாளம் காட்ட காரணம் கூறி கைது செய்தும் உறவினர்களுக்கு தகவல் கொடுத்தும். உச்சநீதிமன்ற கட்டளை நிறைவேற்றியும் 17.00 மணிக்கு நிலையம் வந்து பாராவசம் ஒப்படைத்தும் எதிரியை கனம் நீதித்துறை நடுவர் எண்.1 பண்ருட்டி நீதிமன்றத்தில் ஒப்படைத்தும், பின்பு 29.08.2022 அன்று தொடர்ந்து விசாரணை

மேற்கொண்டதில் எதிரிகள் ஆனந்தி, ராயர்பிள்ளை ஆகியோர் தலைமறைவாக இருப்பதை தெரிந்துக்கொண்டு அவர்களை தேடியதில் கடலூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் அவர்கள் முன்ஜாமீன் பெற்ற விவரம் தெரிந்துக்கொண்டேன். பிறகு நிலையம் வந்த உக்கிரவேலிடம் விசாரணை மேற்கொண்டு அவர் தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை சாட்சிகள் உக்கிரவேல் த.பெ. ராமலிங்கம், ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து (உக்கிரவேல் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் வழக்கு கோப்பில் இல்லை. ஆனால் எதிரி 1 உக்கிரவேலின் 161 குவிமுசவின் கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் மட்டும் உள்ளது) உக்கிரவேல் அடையாளம் காட்டிய அவர் வீட்டு அருகாமையில் இருந்த சுமார் 59 cm நீளமுள்ள இரும்பு கடப்பாறை ஒன்றும் 109 cm நீளமுள்ள தையல தடி ஒன்றும், 90.5 cm நீளமுள்ள தைல தடி ஒன்றும் சாட்சிகள் முன் கைப்பற்றுதல் மகஜர் கைப்பற்றினனேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அதசாஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு 29.11.2022 அன்று 13.00 மணிக்கு இறந்துபோன ஞானசெல்வம் அவரின் மனைவி ராஜலட்சுமி நிலையம் ஆஜராகி கொடுத்த தகவலின் படி அவரது கணவர் சிகிச்சை பலனின்றி 28.11.2022 ஆம் தேதி அன்று பகல் 1.40 மணிக்கு இறந்து விட்டதாக தெரிய வந்தது. தன் கணவர் இறப்பின் சந்தேகம் இருப்பதாக அவர் கூறியதன் அடிப்படையில் வழக்கின் பிரிவை 29.11.2022 அன்று மதியம் 13.30 மணிக்கு 174(1), இதசப்படி சந்தேக மரண வழக்காக பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தாக்கல் செய்தேன். **அந்த பிரிவு மாற்றல் அறிக்கை அதசாஆ 9 ஆகும்.**

அந்த அறிக்கையை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார். விசாரித்த சமயத்தில் எதிரிகள் மீது கொலை வழக்காக இருப்பது எனக்கு தெரிய வந்தது.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

18.08.2022 அன்று நடந்த சம்பவத்திற்கு 20.08.2022 அன்று தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏன் காலதாமதம் என்று எனது விசாரணையில் தெரிய வரவில்லை. வழக்கை 174(1) குவிமுச வின் கீழ் 29.11.2022 அன்று பிரிவு மாற்றல் செய்யும் வரை நான் தான் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். இறந்த ஞானசெல்வத்தை 20.08.2022 அன்று கடலூர் அரசு மருத்துவமனையில் விசாரித்தேன். குறிப்பிட்டு எத்தனை மணிக்கு என்று ஞாபகம் இல்லை. அன்று ஞானசெல்வத்திற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் யார் என்ற குறிப்பு என்னிடம் இல்லை. ஞானசெல்வத்தை நான் விசாரித்து வாக்குமூலம் பெற்றதாக சொல்லப்படும் நேரத்தில் ஞானசெல்வம் நல்ல மனநிலை மற்றும் உடல்நிலையில் இருந்தார் என்று காண்பிக்க கூடிய ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை. சம்பவத்தை யாரும் கண்ணுற்றதாக இல்லை என்றால் சரிதான். பிரச்சினைக்குரிய வேப்பமரம் எந்த இடத்தில் இருந்தது என்பதை நான் பார்வை மகஜர் மற்றும் வரைப்படத்தில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் வரைப்படத்தில் தென்கிழக்கு E.B post அடுத்து பாலு காலிமனையும் ஒரு வேப்பமரமும் காண்பிக்கப்பட்டுள்ளது அது பிரச்சினைக்குரிய வேப்பமரம் கிடையாது.

என்னுடைய விசாரணையில் வெட்டப்பட்ட வேப்பமரம் குறித்து எந்த ஒரு தகவலும் இல்லை என்றால் சரிதான். ஞானசெல்வம் 108 ஆம்புலன்ஸ் தான் மருத்துவமனை சென்றார் என்றால் சரிதான். ஞானசெல்வம் எப்போது மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்று எனது விசாரணையில் தெரிய வரவில்லை. ஞானசெல்வம் மருத்துவமனைக்கும் வீட்டிற்கும் என மாறி மாறி சென்று வந்தார் அவர் ஊரில் இல்லை எனவே அவரிடம் மறுவாக்குமூலம் எதுவும் நான் வாங்கவில்லை. வழக்கிற்காக ஞானசெல்வம் வீட்டிற்கும் மருத்துவமனைக்கும் மாறி மாறி சென்று வந்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எதிரி உக்கிரவேல் பிணையில் வந்து நிபந்தனை கையொப்பம் காவல் நிலையத்தில் போட வந்த போது தான் நான் சொல்லும் வாக்குமூலம் பெற்றதாக கூறுகிறேன் என்றால் சரிதான். அவ்வாறு நீதிமன்ற பிணையில் நிபந்தனை கையொப்பம் போட வந்த எதிரியிடம் பெறும் வாக்குமூலம் சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதசாஆ 9 முன்னிலைக்கு வழக்கை 174(1) குவிமுசவின் கீழ் பிரிவு மாற்றம் செய்த பிறகு வருவாய் கோட்டாட்சியர் விசாரணைக்கு நான் அனுப்பி வைக்கவில்லை. 2 மற்றும் 3 எதிரிகள் 25.08.2022 அன்று முன்பிணை பெற்றார்கள். 2 மற்றும் 3 எதிரிகளை அவர்களது முன்பிணைக்கு பிறகு நான் எதுவும் விசாரிக்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் 2வது எதிரி ஆனந்தி 7 மாதம் கர்ப்பம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன் காரணமாக 2வது எதிரி ஆனந்தி ஞானசெல்வத்தை ஆயுதத்தால் தாக்கினார் என்று சொல்லுவது தவறு

என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் 1வது எதிரியை உக்கிரவேலை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்திற்கு சென்று ஆவணம் எதுவும் தயாரிக்கவில்லை என்றாலும் அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 3 எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court,*
*read over and interpreted to the Witness.*
*Admitted and acknowledged by him/*
*her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*